IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.155/2025

Deposition of Witness for P.W.1

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.உமா சங்கர் |
| FATHER NAME | - | கண்ணாயிரம் |
| VILLAGE | - | ஏரியூர் |
| TALUK | - | வேலூர் |
| OCCUPATION | - | ஆட்டோ ஓட்டுநர் |
| AGE | - | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.02.2026.

2ம் எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை-

நான் ஏரியூரில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 28.04.2024 தேதி இரவு 10.00 மணியளவில் நான் பெருமுகை சுடுகாட்டு அருகே அமைந்துள்ள பாரை எனது மகன் சந்துரு ஏலம் எடுத்து நடத்தி வருகிறார், அன்று இரவு 10.00 மணிக்கு ஆற்றுக்கு போய்விட்டு நானும் காமராஜீம் பாரை மூடுவதற்காக ஆனந்தன், மாதவன், லோகேஷ், ராஜா மற்ற அனைத்து எதிரிகளும் வந்து என்னிடம் எனது மகன் சந்துரு எங்கே என்று மிரட்டி கேட்டார்கள். எதற்கு கேட்கிறீர்கள் என்று நான் கேட்டேன். அதற்கு எதிரிகள் எனது மகன் கரும்பு ஜீஸ் கடையை தள்ளிவிட்டு வந்ததாக சொன்னார்கள். மாதவன், ஆனந்தன், லோகேஷ், ராஜா ஆகிய நான்கு எதிரிகளும் எனது சட்டையை பிடித்துக் கொண்டார்கள். தேவிடியா பையா உன் மகனை வெட்டாமல் விடமாட்டோம்

என ஆனந்தன், மாதவன் ஆகியோர் கத்தியை வைத்துக்கொண்டு என்னை வெட்ட வந்தார்கள். நான் உடனே சுதாரித்து பாருக்குல் ஓடிவிட்டேன். அப்போது எதிரிகள் அனைவரும் பாரை கொளுத்திக்கொண்டிருந்தார்கள். கட்டையால் Fan, CCTV Camera, Freezer Box ஆகியவற்றை உடைத்தார்கள். பாருக்கு வெளியே இருந்த தகுடை உடைத்துவிட்டு பாருக்குள் இருந்த Screen துணியை பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிட்டார்கள். நான் உடலில் தண்ணீரை ஊற்றிக்கொண்டு பயந்து கொண்டு பாருக்கு வெளியே ஓடிவிட்டேன். ஓடும்போது எதிரிகள் என்னை பார்த்து நீ எங்கு ஓடுகிறாயோ ஓடு உனது மகனை வெட்டாமல் விடமாட்டோம் என மிரட்டினார்கள். நான் பாருக்கு அருகேயுள்ள புதரில் ஒளிந்துகொண்டேன். இரவு 02.00 மணிக்கு புதரிலிருந்து வெளியே வந்து காவல் நிலையத்திற்கு சென்று 03.00 மணிக்கு புகார் கொடுத்தேன். எதிரிகள் கடையை அடித்து நொறுக்கி தீ வைத்த பொருட்களின் மதிப்பு ரூ.2,00,000/- ஆகும். தீயணைப்பு துறை வந்து தீயை அணைத்தனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது அது அ.த.சா.ஆ.1. என்னிடம் காண்பிக்கப்படுவது எதிரிகள் கடையை அடித்து நொறுக்க பயன்படுத்திய கட்டைகள். சா.பொ.1 (வரிசை) 12 எண்ணிக்கை. கத்தி மாதவன், ஆனந்த் என்னை வெட்ட பயன்படுத்தியது. கத்தி சா.பொ.2 (வரிசை) 3 எண்ணிக்கை. என்னிடம் காண்பிக்கப்படும் 7 CCTV Camera உடைந்த நிலையிலுள்ளது. சா.பொ.3 (வரிசை).

சாட்சி நீதிமன்றத்தில் எதிரி ஆனந்தன், ராஜா, மாதவன் ஆகியோர்களை நீதிமன்றததில் சரியாக அடையாளம் காண்பித்தார் இரண்டாவது எதிரி லோகேஷ் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்றும் சாட்சி கூறினார் இரண்டாவது எதிரி 355 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை-எதிரிகள் தரப்பு ஆஜரான வழக்கறிஞர் மூத்த வழக்கறிஞர் Out of Station என தெரிவித்து குறுக்கு விசாரணை செய்ய இயலாது என கூறிவிட்டதால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என அ.சா.1 சாட்சியம் முடிக்கப்பட்டது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 23.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.24 15:06:39 +0600

Additional District Judge(FTC),
Vellore